# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.55/2023

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு மார்ச் மாதம் 3 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முனிரத்தினம் | மதம் | : இந்து |
| த/பெ | : கோவிந்த மந்தடி | ஜாதி | : -- |
| வயது | : 75 | கிராமம் | : அருங்குளம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**03.03.2025**

**<u>வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

14. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 7ல் பிரதிவாதிகள் எனது பக்கத்து நிலத்து உரிமைக்காரர்கள் என சொல்லியுள்ளேன் என்றால் அவர்களுக்கு பக்கத்தில் நிலமே இல்லை. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 7ல் பிரதிவாதிகள் எனது பக்கத்து நிலத்து உரிமைக்காரர்கள் என நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலம் பத்தி 7ல் பிரதிவாதிகள் எனது பக்கத்து நிலத்து உரிமைக்காரர்கள் என சொல்லியிருப்பது பொய் என்றால் அவ்வாறு நான் சொல்லவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது நிலத்தின் புல எண், விஸ்தீரணம் சொல்லவில்லை என்றால் சொல்லியிருப்பேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது நிலத்தின் புல எண், விஸ்தீரணம் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல.

15. எனது சொத்தை அபகரிக்க முயற்சி செய்ததாக நான் கனகம்மாசத்திர காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம். நான் கொடுத்த புகாருக்கு காவல் நிலையத்தில் கொடுத்த ரசீதுதான் வா.சா.ஆ 6 என்றால் ஆமாம். நான் வழக்கு சொத்தின் புல எண்ணை குறிப்பிட்டு புகார் கொடுத்தேனா என்றால் சொல்லியிருப்பேன். நான் கொடுத்த புகார் மனுவின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் கொடுத்தேனா என்பது தெரியவில்லை. **(சாட்சி தற்போது**

**பின்வருமாறு தன்னிச்சையாக மாற்றி கூறுகிறார்)** கொடுத்திருப்பேன். வா.சா.ஆ 6 சுமதி என்பவர் கொடுத்த புகாருக்கு கொடுக்கப்பட்ட மனு ரசீது என்றால் நான் சண்டையிட்டதற்கு தனியாக மனு கொடுத்தேன். அதன் பின்புதான் சுமதி சண்டையிட்டதற்கு மனு கொடுத்தார்.

16. நான் தாக்கல் செய்த பிராதிலும் பிரமாண வாக்குமூலத்திலும் எனக்கு பின்பு சுமதி புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் எனது வழக்கைதான் கொடுத்திருப்பேன். சுமதியை பற்றி கொடுக்கவில்லை. எனது பிராதிலும் பிரமாண வாக்குமூலத்திலும் பிரதிவாதிகளின் மீது புகார் கொடுத்ததாக தேதியை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் பிரதிவாதிகள் மீது காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்த பிராதிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சுமதி புகார் கொடுத்ததாகதான் சொல்லியுள்ளேன் என்றால் அது 2 வது சண்டை. அது வேறு சண்டையாகும்.

17. சுமதி கொடுத்த புகாருக்கு காவல் நிலையத்தில் கொடுத்த புகார் ரசீதுதான் வா.சா.ஆ 6 என்றால் சரிதான். வா.சா.ஆ 6 புகாரில் புல எண்.292/9, 292/10ல் பயிர் செய்து நெல் விதைத்த நிலத்தில் என வழக்கு சொத்து அல்லாத வேறு சொத்திற்கு புகார் கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். புல எண்.288/2, 288/3 சம்மந்தமாக உண்மையிலேயே எங்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை இருந்திருந்தால் நான் உண்மையிலேயே புகார் கொடுத்திருப்பேன் என்றால் பிரச்சனை இருந்துதான் சண்டை வந்தது. உண்மையிலேயே நான் சொல்வதுபோல் சண்டை வந்திருந்தால் நான் அது தொடர்பாக என் தரப்பில் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்திருப்பேன் என்றால் கொடுத்துள்ளேனா இல்லையா என்பது தெரியவில்லை.

18. புல எண்.288/2, 288/3 ஆகியவை தொடர்பாக பிரதிவாதிகள் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர் என்றால் அந்த சொத்துக்கள் என்னுடைய சொத்து. யாரும் எந்த காலத்திலும் பயிர் செய்யவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 7 பட்டா என் மகன் ரமேஷ், மகள் ரோஜா பெயரில் உள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ 7 கூட்டு பட்டாவில் வழக்கு புல எண்.288/2, 288/3 உள்ளதா என்றால் புல எண்.288/2தான் ரோஜா ரமேஷ் பெயரில் உள்ளது. புல எண்

288/3 பட்டாவில் வராது. அது எங்கள் பூர்வீக சொத்தாகும். எனது பிரமாண வாக்குமூலத்தில் 6ம் பத்தியில் பி அட்டவணை சொத்து எனது பூர்வீக சொத்து என்பதை காட்ட SLR, அ பதிவேடு ஆகியவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் சித்தப்பா என் அப்பாவிற்கு எழுதி கொடுத்த பத்திரமும் என் அப்பா பெயரில் உள்ள பட்டாவும் தாக்கல் செய்துள்ளேன்.

19. என் அப்பா பெயரில் உள்ள பட்டா எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கணினி பட்டா கொடுத்துள்ளேன். பட்டா எண் சொல்லமுடியுமா என்றால் என்னால் எண்கள் சொல்ல முடியாது. நான் கொடுத்ததாக சொல்லும் என் அப்பா பெயரில், என் பெயரில், என் மகன், மகள் பெயரில் உள்ள பட்டாவின் நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்து என்றாலும் போலி ஆவணங்கள் மூலம் நான் சொத்தை அபகரிக்க வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து எனது பூர்வீக சொத்தாகும்.

20. நான் பூர்வீக சொத்தை அனுபவித்து வருவதாக சொல்லுவது சம்மந்தமாக நான் அனுபவித்ததை காட்ட சிட்டா, அடங்கல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சிட்டா உள்ளது. அடங்கல் தாக்கல் செய்துள்ளேன். இந்த ஆவணங்களை வழக்கு தாக்கல் செய்யும்போது தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். வழக்கில் எத்தனையாவது ஆவணமாக நான் தாக்கல் செய்துள்ளேன் என்பதை சொல்ல முடியுமா என்றால் எனக்கு படிப்பறிவு இல்லாததால் தெரியாது. என் வழக்கறிஞருக்குதான் தெரியும். நான் உண்மையிலேயே அனுபவித்து இருந்தால் சிட்டா, அடங்கல் ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சிட்டா, அடங்கல் தாக்கல் செய்துள்ளேன்.

21. பிரதிவாதிகள் தனது அனுபவத்தை நிரூபிக்க சிட்டா, அடங்கல் தாக்கல் செய்துள்ளனர் என்றால் வழக்கு சொத்தை நாங்கள் முனி மந்தடியிடமிருந்தும், வேறு சிலரிடமிருந்தும் வாங்கினோம். நான் நிரந்தர உறுத்துக்கட்டளை கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் கேட்டுள்ள பரிகாரம் சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. சொத்து என்னுடையது. வழக்கு சொத்துக்களுக்கு பிரதிவாதிகள் பெயரில் ஆவணங்கள் சார்பதிவாளர் அலுவலகத்தில்

பதிவு செய்யப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. நான் விளம்புகை பரிகாரம்தான் கேட்டிருக்க வேண்டும் என்றாலும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ள என் வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

22. நான் நீதிமன்றத்திற்கு விளம்புகை பரிகாரத்திற்காக 3 சதவீதம் நீதிமன்ற கட்டணம் செலுத்துவதை தவிர்க்க வேண்டி நிரந்தர உறுத்துக்கட்டளை மட்டும் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் உரிய கால அவகாசத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றாலும் கால அவகாசம் முடிந்த தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்துக்களான புல எண்.288/2, 288/3 பிரதிவாதிகள் பெயரில் ஆவணம் பதிவு செய்யப்பட்டு பட்டா, சிட்டா, அடங்கல் ஏற்பட்டு பிரதிவாதிகள் வழக்கு சொத்து அனுபவித்து வருகிறார்கள் என்றாலும் நான் வழக்கு சொத்தை அபகரிக்கும் நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இல்லை. நான் நீதிமன்றத்தை ஏமாற்றும் நோக்கில் பிரதிவாதிகளின் ஆவணங்களையும் வழக்கு சொத்தின் ஆவணங்களையும் மறைத்து இடைக்கால உறுத்துக்கட்டளை வாங்கியுள்ளேன் என்றாலும் சரியல்ல. என் வழக்கு சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றாலும் தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)